செ.வெ.எண்: 355 நாள்:02.06.2018

திருநெல்வேலி அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் ரூ.50 லட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்ட உள்நோயாளிகளின் உறவினர்கள் தங்கும் சிறப்பு விடுதியினை மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அமைச்சர் திருமதி.வி.எம்.ராஜலெட்சுமி அவர்கள் திறந்து வைத்தார்கள். மேலும் இராணி அண்ணா அரசு மகளிர் கலை கல்லூரியில் ரூ.3.60 கோடி மதிப்பிலான புரட்சித்தலைவர் எம்.ஜீ.ஆர் நூற்றாண்டு விழா புதிய கூடுதல் வகுப்பறை கட்டுமான பணிகளை தொடங்கி வைத்தார்.

-----

திருநெல்வேலி அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் உள்நோயாளிகளின் உறவினர்கள் தங்கும் சிறப்பு விடுதி திறப்பு விழா மற்றும் இராணி அண்ணா அரசு மகளிர் கலை கல்லூரியில் ”புரட்சித்தலைவர் எம்.ஜீ.ஆர் நூற்றாண்டு விழா கட்டிடங்கள்" கூடுதல் வகுப்பறை கட்டுமான பணிகள் துவக்க விழா மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.ஷில்பா பிரபாகர் சதீஷ்,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் இன்று (02.06.2018) நடைபெற்றது. இவ்விழாவில் மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அமைச்சர் திருமதி.வி.எம்.ராஜலெட்சுமி அவர்கள் கலந்து கொண்டு அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் ரூ.50 லட்சம் மதிப்பில் கட்டப்பட்ட உள்நோயளிகளின் உறவினர்கள் தங்கும் சிறப்பு விடுதியை திறந்து வைத்தார். மேலும் இராணி அண்ணா கல்லூரியில் ”புரட்சித்தலைவர் எம்.ஜீ.ஆர் நூற்றாண்டு விழா கட்டிடங்கள்" எனும் பெயரில் ரூ.3.60 கோடி மதிப்பீட்டில் கூடுதல் வகுப்பறை கட்டுமான பணிகளை தொடங்கி வைத்தார்.

பின்னர் மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அமைச்சர் அவர்கள் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:-

திருநெல்வேலி மாநகராட்சி நிதியின் மூலம் தேசிய நகர்புற வாழ்வாதார திட்டத்தில் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் ரூ.50 லட்சம் மதிப்பீட்டில் 25 ஆண்கள் மற்றும் 25 பெண்கள் தங்கும் வகையில் உள்நோயாளிகளின் உறவினர்கள் தங்கும் சிறப்பு விடுதி திறந்து வைக்கப்பட்டுள்ளது. இவ்விடுதியில் கழிவறை, குளியலறை வசதியுடன் பாதுகாப்புடன் தாங்குவதற்கான வசதி செய்யப்பட்டுள்ளது. இது ஏழை எளிய உள்நோயாளிகளின் உறவினர்களுக்கு மிகுந்த மகிழ்சியை தரும். மேலும் திருநெல்வேலி இராணி அண்ணா மகளிர் கல்லூரியில் மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜீ.ஆர் அவர்களின் நூற்றாண்டு விழாவினை குறிக்கும் வகையில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் அறிவிக்கப்பட்ட இராணி அண்ணா கல்லூரியில் ”புரட்சித்தலைவர் எம்.ஜீ.ஆர் நூற்றாண்டு விழா கட்டிடங்கள்" எனும் பெயரில் ரூ.3.60 கோடி மதிப்பீட்டில் 12 வகுப்பறைகள், 5 ஆய்வகங்கள் என கூடுதல் வகுப்பறை கட்டுமான பணிகள் இன்று துவக்கி வைக்கப்பட்டுள்ளது. ஓராண்டு காலத்திற்குள் இப்பணிகள் முடிக்கப்படும். கல்லூரி மாணவிகளுக்கு கல்வி கற்க பயனுள்ள வகையில் அமையும் என தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சிகளில் நாடாளுமன்ற உறுப்பினர் திரு.முத்துகருப்பன், திருநெல்வேலி வருவாய் கோட்டாட்சியர் திருமதி.மைதிலி, கல்லூரி முதல்வர் முனைவர்.சி.வே. மைதிலி, மருத்துவ கல்லூரி முதல்வர் மரு. கண்ணன், மாநகராட்சி நல அலுவலர் மரு.பொற்செல்வன்,

துணை முதல்வர் மரு.ரேவதி, பாளையங்கோட்டை மண்டல உதவி ஆணையர் திரு. ஐப்பன், மாநகராட்சி உதவி செயற்பொறியாளர் திரு.பாஸ்கரன், பொதுப்பணித்துறை தொழில் நூட்ப கல்வி கோட்ட செயற்பொறியாளர் திரு. சக்திய வாகீஸ்வரன், உதவி செயற்பொறியாளர் திரு.வெள்ளச்சாமி ராஜ், உதவி பொறியாளர் திரு.முருகேசன், முக்கிய பிரமுகர்கள் திரு.சுதாபரமசிவம், திரு.பரணி சங்கரலிங்கம், திரு.கண்ணன் (எ) ராஜூ, திரு.சுப்பையாபாண்டியன், திரு.ஆவின் ரமேஷ், திரு.ஆறுமுகம், திரு.மகாபூப் ஜான், திரு.கிருஷ்ணமூர்த்தி மற்றும் அலுவலர்கள் முக்கிய பிரமுகர்கள் கலந்து கொண்டனர்.

வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், திருநெல்வேலி.